www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com

11ஆம் வகுப்பு

# அரையாண்டுத் தேர்வு - டிசம்பர் 2024 - 25

## மொழிப்பாடம் - பகுதி I - தமிழ்

நேரம் : 3.00 மணி ] (வினாத்தாள் விடைகளுடன்) [ மொத்த மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி - I

**குறிப்பு : (அ) அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக.

**(ஆ)** கொடுக்கப்பட்ட **நான்கு** விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக. [14 × 1 = 14]

1. திருக்குறளில் உள்ள இயல்களின் எண்ணிக்கை
அ) 9 ஆ) 7 இ) 8 ஈ) 10

2. கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை
அ) மதிப்புக் கூட்டுப் பொருள்கள்
ஆ) நேரடிப்பொருள்கள்
அ) அ மட்டும் சரி ஆ) ஆ மட்டும் சரி
இ) இரண்டும் சரி ஈ) அ தவறு ஆ சரி

3. ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாத குறிப்பு எது?
அ) மொழிபெயர்ப்பாளர் ஆ) இந்தியாவின் பெப்பிசு
இ) தலைமைத் துவிபாஷி
ஈ) உலக நாட்குறிப்பின் தந்தை

4. பாயிரம் இல்லது ........................ அன்றே.
அ) பனுவல் ஆ) பாடல்
இ) காவியம் ஈ) கவிதை

5. தஞ்சைப் பெரிய கோவிலை இராசராச சோழன் தான் கட்டினான் என்று உறுதி செய்தவர்
அ) எஸ்.கே.கோவிந்தசாமி
ஆ) ஷீல்ஸ்
இ) பிரடிரிகா ஈ) மகேந்திரவர்மன்

6. 9 அடி சிற்றெல்லையும் 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல்
அ) நற்றிணை ஆ) குறுந்தொகை
இ) அகநானூறு ஈ) ஐங்குறுநூறு

7. அ) கல்வி அழகே அழகு - 1) தொல்காப்பியச்சிறப்புப்பாயிர உரைப்பாடல்
ஆ) இளமையில் கல் - 2) திருமந்திரம்
இ) துணையாய் வருவது தூயநற்கல்வி - 3) ஆத்திசூடி
ஈ) பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல் - 4) திருக்குறள்
- 5) நாலடியார்
அ) அ - 2, ஆ - 3, இ - 4, ஈ - 1
ஆ) அ - 3, ஆ - 4, இ - 1, ஈ - 2
இ) அ - 5, ஆ - 3, இ - 2, ஈ - 1
ஈ) அ - 4, ஆ - 1, இ - 2, ஈ - 5

8. **கூற்று** : எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பதிற்றுப் பத்து புறம் சார்ந்த நூல்
**காரணம் :** சேர மன்னர் பதின்மரின் சிறப்புகளைக் கூறுகிறது இந்நூல்.
அ) கூற்று சரி; காரணம் தவறு
ஆ) இரண்டும் சரி
இ) இரண்டிற்கும் தொடர்பில்லை
ஈ) கூற்று தவறு; காரணம் சரி

9. நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது:
அ) காய் முன் நேர் ஆ) காய் முன் நிரை
இ) கனிமுன் நிரை ஈ) மா முன் நேர்

10. எட்டுத்தொகை நூல்களுள் முதன் முதலாகத் தொகுக்கப்பட்ட நூல்
அ) புறநானூறு ஆ) குறுந்தொகை
இ) ஐங்குறுநூறு ஈ) பதிற்றுப்பத்து

11. தமிழின் முதல் பாவடிவ நாடக நூல்
அ) இரகசியவழி
ஆ) மனோன்மணீயம்
இ) நூல்தொகை விளக்கம்
ஈ) திருவிதாங்கூர் அரசர் வரலாறு

12. பகுபத உறுப்புகளுள் இடம்பெறும் அடிப்படை உறுப்புகள் எவை?
அ) பகுதி,விகுதி,சந்தி,சாரியை,இடைநிலை, விகாரம்
ஆ) பகுதி, இடைநிலை, சாரியை
இ) பகுதி, சந்தி, விகாரம்
ஈ) பகுதி, விகுதி

13. "விண்பொரு நெடுவரை குறிஞ்சிக்கிழவ" - பாடல் இடம் பெற்றுள்ள நூல் ....................
அ) திருமுருகாற்றுப்படை
ஆ) சிறுபாணாற்றுப்படை
இ) பெரும்பாணாற்றுப்படை
ஈ) முல்லைப்பாட்டு

14. பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று
அ) சாழல் ஆ) சிற்றில்
இ) சிறுதேர் ஈ) சிறுபறை

### பகுதி - II - பிரிவு - 1

**எவையேனும் மூன்று** வினாக்களுக்கு விடையளி. [3 × 2 = 6]

15. இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.

16. சீர்தூக்கி ஆராய வேண்டிய ஆற்றல்கள் யாவை?

17. ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள?" - இவ்வடி எதனைக் குறிப்பிடுகிறது?

18. ஊனமில் ஊக்கமும் ஒளிரக் காய்த்த நல்
தீன்எனுஞ் செல்வமே பழுத்த சேணகர்" - இப்பாடலடிகளில் ஒளிரக் காய்த்தது எது? பழுத்தது எது?

#### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு விடை தருக. [2 × 2 = 4]

19. "கோட்டை" என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?

20. "நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல்" என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.

21. குருகுலக் கல்வி முறை குறித்து எழுதுக.



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**பிரிவு - 3**

**எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடை தருக. [7 ×2 = 14]

**22.** பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக

அ) தேர்வெழுத வேகமா போங்க, நேரங்கழிச்சி போனாப் பதட்டமாயிரும்

**23.** மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் எழுதுக.

அ) பொரி, பொறி **(அல்லது)** ஆ) கனை, கணை

**24.** கலைச்சொல் :

அ) Harvesting

ஆ) Debate

**25.** வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

அ) தமிழர் ஆற்று தண்ணீரை தேக்கி சேமித்து கால்வாய் வெட்டிப் பாசனம் செய்தனர்.

**26.** சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.

அ) நஞ்சிருக்கும் ஆ) கால்நடை

**27.** தஞ்சைக் கோவில் எண்பட்டை வடிவில் கட்டப்பட்ட திராவிடக் கலைப்பாணியாகும். (வினாத்தொடராக்குக)

**28.** இலக்கணக் குறிப்பு தருக.

அ) மஞ்ஞையும் கொண்டலும் **(அல்லது)** ஆ) மாநகர்

**29.** உறுப்பிலக்கணம் தருக.

அ) மெலிந்து **(அல்லது)** ஆ) அழைத்தான்

**30.** புணர்ச்சி விதி தருக.

அ) நீரோடை **(அல்லது)** ஆ) செங்கயல்

**பகுதி - III - பிரிவு - 1**

**எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு விடை தருக. [2 × 4 = 8]

**31.** சு. வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?

**32.** "ஏவல் மறுக்கும் சிறுவிளையாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்" - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

**33.** சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாக குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை?

**34.** 'சேரநாடு செல்வ வளம் மிக்கது' என்ற கூற்றிற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு விடை தருக. [2 × 4 = 8]

**35.** வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்கு சாத்தியமா? - நும் கருத்தை எழுதுக.

**36.** சமணப்பள்ளிகளும் பௌத்தக் கல்வியும் - குறிப்பு வரைக.

**37.** ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதி வழி எடுத்துக்காட்டுக.

**38.** தாமலிகம் என்றால் என்ன?

**பிரிவு - 3**

**எவையேனும் மூன்றனுக்கு விடையளிக்க.** [3 × 4 = 12]

**39.** சொற்பொருள் பின்வருநிலையணியை சான்றுடன் விளக்குக. **(அல்லது)**

இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

**40.** பொருண்மொழிக்காஞ்சித் துறையை விளக்குக.


**(அல்லது)**

பாடாண் திணையை விளக்குக.

**41.** அடைப்புக்குள் உள்ள ஆக்கப்பெயர் விகுதிகளைக் கொண்டு விடுகதைகளுக்குரிய ஆக்கப்பெயர்களைக் கண்டறிக.

1. வேவு பார்த்திடுவான், ஓசையின்றிச் சென்றிடுவான் (ஆளி)...................
2. அறிவைத் தேடிப் போகுமிடம், உலகை அறிய உதவுமிடம் (அகம்) .......................
3. வந்தால் மகிழ்ச்சி இது; உழைத்தால் கிடைக்கும் இது (மானம்) .....................
4. வேடம் போட்டவன் வேடதாரி; பட்டம் வாங்கினவன்? (தாரி) ..........

**42.** கருத்துப் படத்தைப் புரிந்து கொண்டு பத்தியாக எழுதுக.




**43.** இலக்கிய நயம் பாராட்டுக.(மையக்கருத்து எழுதி, ஏற்புடைய நயங்களை எழுதுக.)

"தண்டலை மயில்கள் ஆட, தாமரை விளக்கம் தாங்க,
கொண்டல்கள் முழவின் ஏங்க, குவளைகண் விழித்து நோக்க,
தெண் திரை எழினி காட்ட, தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட, மருதம் வீற்றிருக்கும் மாதோ."

**– கம்பர்**

**பகுதி - IV**

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக. [3 × 6 = 18]

**44.** அ) அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும் - இக்கூற்றை முப்பால்வழி விளக்குக.

**(அல்லது)**

ஆ) பாரதிதாசன் ஒரு 'புரட்சிக்கவி' என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.

**45.** அ) "சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே" என்னும் தலைப்பில் மேடைப் பேச்சிற்கான உரையை உருவாக்குக.

**(அல்லது)**

ஆ) 'கல்லும் கதை சொல்லும்' - என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக.

**46.** அ) தமிழர் வாழ்வோடும் புலம்பெயர் நிகழ்வுகளோடும் அ.முத்துலிங்கத்தின் திணைப்பாகுபாடு எவ்வாறு இணைக்கப்படுகிறது? **(அல்லது)**

ஆ) நர்த்தகி நடராஜின் நேர்காணல் வழி அறிந்த வற்றைத் தொகுத்து அமைக்க.

**பகுதி - V**

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில்** எழுதுக. [4 + 2 = 6]

**47.** அ) "உடைஅணிந்தேன்....." எனத் தொடங்கும் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) 'செயல்' - என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



## விடைகள்

### பகுதி - I

1. அ) 9
2. அ) அ மட்டும் சரி
3. ஈ) உலக நாட்குறிப்பின் தந்தை
4. அ) பனுவல்
5. ஆ) ஷீல்ஸ்
6. அ) நற்றிணை
7. இ) அ - 5, ஆ - 3, இ - 2, ஈ - 1
8. ஆ) இரண்டும் சரி
9. ஈ) மா முன் நேர்
10. ஆ) குறுந்தொகை
11. ஆ) மனோன்மணீயம்
12. ஈ) பகுதி, விகுதி
13. அ) திருமுருகாற்றுப்படை
14. அ) சாழல்

### பகுதி - II - பிரிவு - 1

15. தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை, வேரில்லாத மரம்; கூடில்லாத பறவை என இனம், மொழி குறித்து இரசூல் கம்சதோவ் குறிப்பிடுகிறார்.

16. (i) தான் செய்யும் செயலின் வலிமை.
(ii) அதை செய்வதற்குரிய தன் வலிமை
(iii) அதற்கு தடையாக இருக்கும் பகைவனின் வலிமை
(iv) அச்செயலைச் செய்வதற்கு தனக்குத் துணையாக இருப்பவரின் வலிமை ஆகியவற்றை சீர்தூக்கி ஆராய வேண்டும்.

17. எப்படிப்பட்ட தன்மையுடைய மண்ணையும் மெழுகைவிட சிறந்த முறையில் பதப்படுத்தி உழவுக்கும் உழவருக்கும் உதவும் சிறந்த ஒழுக்கத்தையும், எறும்புகளும், புழுக்களும், பூச்சிகளும் அடித்துத் துன்புறுத்தினாலும் அவைகளைப் பொறுத்துக்கொண்டு அவைகளுக்கும் உதவும் மண்புழுவை இவ்வடி குறிப்பிடுகிறது.

18. (i) **காய்த்தது** : வெற்றியைத் தருகின்ற குறைவற்ற ஊக்கம் முதலியன காய்த்திருந்தன.
(ii) **பழுத்தது** : தீன் எனும் செல்வம் பழுத்திருந்தது செம்மை பொருந்திய நகராக மதீனா இருந்தது.

### பிரிவு - 2

19. திராவிட வேர்ச்சொல் அகராதி, கோட்டை என்ற சொல்லோடு தொடர்புடைய பல்வேறு திராவிட மொழிச் சொற்களைக் கீழ்வருமாறு பட்டியலிடுகிறது.

| | |
|---|---|
| தமிழ் | கோட்டை, கோடு |
| மலையாளம் | கோட்டட, கோடு |
| கன்னடம் | கோட்டே, கோண்டே |
| தெலுங்கு | கோட்ட |
| துளு | கோட்டே |
| தோடா | க்வாட் |

20. **உவமை :** வாண வேடிக்கைக்காரன் 'நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல.'
**ஒப்பீடு :**
(i) ஒரு சில கருத்துக்களை விரிவாகச் சொல்லிபுரிய வைத்துவிட்டால் போதும் என்பதே அவருடைய எண்ணம்.
(ii) வாண வேடிக்கைக்காரன் 'நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல' இரண்டு கைப்பிடி விசயம்தான் எடுத்துக் கொள்வார்.
(iii) மேடைமீது ஏறி அதற்கு நெருப்பு வைத்ததும் அதிலிருந்து வர்ண ஜாலங்கள் தோன்றும்.
(iv) பச்சையும் சிவப்பும் மஞ்சளும் உதிரும்; குடை குடையாய் இறங்கி வரும்; மாலை மாலையாய் இறங்கி வரும்.

21. **குருகுலக்கல்வி முறை :**
(i) இம்முறையில் மாணவர்கள் ஆசிரியர்களை அணுகி அவருடன் பல ஆண்டுகள் தங்கி, அவருக்குத் தேவைப்படும் பணிகளைச் செய்து கல்வி கற்றனர்.
(ii) செய்து கற்றல், வாழ்ந்து கற்றல், எளிமையாக வாழ்தல் என்ற அடிப்படையில் இக்குருகுலக் கல்வி முறை அமைந்திருந்தது. இம்முறை, போதனா முறையைத் தாண்டி, வாழ்வியலைக் கட்டமைப்பதில் உறுதியானதாக விளங்கியது.

### பிரிவு - 3

22. அ) தேர்வெழுத வேகமாகச் செல்லுங்கள். நேரம் கழித்துச் சென்றால் பதற்றமாகிவிடும்.

23. அ) கண்ணன் **பொரி**யைத் தின்றுகொண்டே, **பொறி**யில் இருந்த பழுதைச் சரி பார்த்தான்.
ஆ) போர்க்களத்தில் **கணை**யால் அடிப்பட்ட குதிரை **கனை**த்தது.

24. அ) Harvesting - அறுவடை
ஆ) Debate - பட்டிமன்றம்

25. அ) தமிழர் ஆற்று**த்** தண்ணீரைத் தேக்கி சேமித்து**க்** கால்வாய் வெட்டி பாசனம் செய்தனர்.

26. அ) **நஞ்சிருக்கும் – நஞ்சு+இருக்கும்**
(i) துணி நீண்ட நாட்கள் பயன்படுத்தியதால் அது **நஞ்சிருக்கும்.**
(ii) பாம்பின் பல்லில் **நஞ்சு இருக்கும்.**
ஆ) **கால் + நடை (கால்நடை)**
(i) **கால்நடை**களை மேய்ச்சல் நிலத்திற்கு ஓட்டிக் கொண்டு போனார்கள்.
(ii) சிறிய தொலைவைக் கடக்கக் **கால் நடை**யாகச் செல்வது உடலுக்கு நலம் பயக்கும்.

27. தஞ்சைக் கோவில் எவ்வகைக் கலைப்பாணியில் கட்டப்பட்டது?

28. அ) மஞ்ஞையும் கொண்டலும் - எண்ணும்மை
ஆ) மாநகர் - உரிச்சொல் தொடர்

29. அ) **மெலிந்து – மெலி + த் (ந்) + த் + உ**
மெலி - பகுதி
த் - சந்தி 'ந்' ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி
ஆ) **அழைத்தான் – அழை + த் + த் + ஆன்**
அழை - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி

30. அ) நீரோடை – **நீர் + ஓடை**
'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி நிலைமொழியின் ஈற்று மெய்யுடன்(ர்) வருமொழியின் முதல் உயிருடன் (ஓ) சேர்ந்து (ர் + ஓ = ரோ) நீரோடை எனப் புணர்ந்தது.

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



ஆ) செங்கயல் = **செம்மை + கயல்**

**விதி 1 :** 'ஈறுபோதல்' எனும் விதிப்படி 'மை' விகுதி கெட்டு. செம்மை + கயல் = செம் + கயல் என்றானது.

**விதி 1 :** 'முன்னின்ற மெய்திரிதல்' எனும் விதிப்படி செம் + கயல் = 'செங்கயல்' என்றானது.

**பகுதி - III - பிரிவு - 1**

31. (i) என் அன்னையே! தலை ஒற்றியெடுத்தபோது நெற்றியில் படிந்த மண்ணின் அழகே! வழிவழியாக உன் திருவடிகளைத் தொழுதவர், உழுதவர், விதைத்தவர், வியர்வை சிந்தியவர்க்கெல்லாம் நிறைமணி தந்தவளே! உனக்குப் பல்லாண்டு, பல்லாயிரத்தாண்டு பாடத்தான் வேண்டும்.

(ii) தொன்மையான கபாடபுரம் போன்ற நிலப்பரப்புகளைப் பலி கொண்ட பிறகும் ஒலிக்கின்ற கடலையும், நெருப்பாற்றையும், மலை உச்சிகளையும் காற்றிலே ஏறிக் கடந்து தமிழைச் செல்லுமாறு கட்டளை இடுகின்ற பாடலைப் பாடத்தான் வேண்டும். மேலும் காலத்தால் அழிவில்லாத தொன்மையான செல்வங்களின் வலிமை சேருமாறு பாடத்தான் வேண்டும் என்று கவிஞர் சு.வில்வரத்தினம் தமிழ்த்தாயை வாழ்த்திப் பாடுகிறார்.

32. (i) **இடம் :** நற்றிணையில் இடம் பெற்ற பாடல் இது. தலைவி இல்லறம் ஆற்றும் செவ்வியைப் பாராட்டிச் செவிலித்தாய் நற்றாயிடம் கூறியது.

(ii) **பொருள் :** 'மகள் நிலை உரைத்தல்' என்பது தலைவனோடு உடன் போகிய விளையாட்டுப் பருவம் மாறாத மகள் இல்லறம் ஆற்றும் பாங்கை நற்றாயிடம் செவிலித்தாய் எண்ணிக் கூறுவது.

(iii) **விளக்கம் :** தேன் கலந்த பாலைத் தலைவிக்கு ஊட்டப் பொற்கிண்ணத்தில் எடுத்துக் கொண்டு செவிலித்தாய் செல்வார். விளையாட்டுப் பருவத்தில் தலைவி அதை உண்ணாமல் அடம்பிடிப்பாள். அங்கும் இங்கும் ஓடுவாள். அத்தகைய சிறுபிள்ளைத்தனம் கொண்டவள் தலைவி. இங்ஙனம் விளையாட்டுப் பிள்ளையான தலைவி சிறப்பாக இல்லறம் நடத்தும் அறிவினை எங்குக் கற்றாள் எனத் செவிலித்தாய் வியக்கிறாள். தன் தந்தையின் செல்வச் செழிப்பை நினைக்கவில்லை. மாறாகத் தன் இல்லத்தில் சூழலுக்கு ஏற்பத் தன் இல்லற வாழ்வை மேற்கொள்கிறாள்.

33. **சிங்கி பெற்ற பரிசுப்பொருட்கள்:**

(i) சேலத்து நாட்டில் குறி சொல்லிப் பெற்ற சிலம்பு
(ii) கோலத்து நாட்டாரிடம் பெற்ற முறுக்கிட்ட தண்டை
(iii) பாண்டியனார் மகள் கொடுத்த பாடகம்
(iv) கண்டி தேசத்தில் பெற்ற காலாழி பீலி.
(v) குற்றாலர் சந்நிதிப் பெண்கள் தந்த அணிமணிக் கெச்சம்.

34. (i) சேர நாடு செல்வ வளம் மிக்க நாடு.

(ii) பசி, பிணி அறியாத நாடு. எப்பொழுதும் விழாக்கள் நடைபெறும் நாடு.

(iii) இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தன் நாட்டையும் மக்களையும் கண்ணெனக் காத்தான். ஆகவே நாட்டு மக்கள் வேற்று நாட்டுக்குச் செல்ல விரும்புவதில்லை.

(iv) புது வருவாய் பெருக்கும் ஈத்துவக்கும் இன்பமும் உடையவன்.

**பிரிவு - 2**

35. **வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி சாத்தியமே:**

(i) வேப்பங்கொட்டை, நொச்சி இலை, புங்கன், பிரண்டை, கற்றாழை ஆகிய அனைத்தையும் நன்றாக இடித்து கோமியத்தில் ஊற வைத்துப் பயிர்களில் தெளித்தால் தாவரத்திலுள்ள பூச்சிகள் வெளியேறும். இதனை 'இயற்கைப் பூச்சிக்கொல்லி' என்கிறோம்.

(ii) செயற்கைப் பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்துவதால் அது பூச்சியை மட்டும் கொல்லாமல் விளைகின்ற பயிர்க்குள்ளேயும் ஊடுருவுகிறது. அதனை உட்கொள்ளும் மக்களுக்குப் புற்றுநோய், வயிற்றுப்புண் என இன்னும் பல நோய்கள் வருகின்றன.

(iii) வேதிக்கலப்பில்லாத இயற்கை உர பூச்சிக்கொல்லியைப் பயன்படுத்தினால் நுண்ணுயிர்ப் பெருக்கம் குறையாமல், மண் சத்து வீணாகாமல் மண்வளமும் அதிகமாகும். இதனால் வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமாகும் என்பதில் ஐயமில்லை.

36. **சமணப் பள்ளிகள் :**

(i) சமண சமயத்தின் தலையாய அறங்களாக விளங்குபவை கல்வி, மருந்து, உணவு, அடைக்கலம் என்ற நான்கு கொடைகளாகும்.
(ii) 'பள்ளி' என்ற சொல்லுக்குப் '**படுக்கை**' என்று பொருள்.
(iii) மாணவர்கள் படுக்கைகளின்மீது அமர்ந்து கற்றதனால் படுக்கை என்பது நாளடைவில் பள்ளிக்கூடம், கல்விக்கூடம் என வழங்கலாயிற்று.
(iv) சமணப் பள்ளிகளில் பயின்ற மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களுக்கு எடுத்த படுக்கைகளைப் பற்றி திருச்சி மலைக்கோட்டையும், புகழ்பெற்ற சமணக் குன்றான கழுகுமலை கல்வெட்டும் குறிப்பிடுகிறது.

**பௌத்தக் கல்வி :**

(i) தமிழர்கள் இன்று பரவலாக ஏற்றுக் கொண்டிருக்கும் பட்டிமண்டபம் என்ற கலைவடிவம் சமயத் துறையிலிருந்து தோன்றியது. பட்டிமண்டபம் என்பது சமயக் கருத்துகள் விவாதிக்கும் இடம் என்று மணிமேகலையில் சுட்டப்படுகின்றது.
'ஒட்டிய சமயத்து உறுபொருள்வாதிகள் பட்டிமண்டபத்துப் பாங்கறிந்து ஏறுமின்' என்று அந்நூல் பேசுகிறது.

(ii) தமிழகத்தில் உள்ள காஞ்சிபுரத்திற்கு வந்து சேர்ந்த சீனப் பயணி **யுவான் சுவாங்**, அங்கிருந்த பௌத்தப் பல்கலைக்கழகத்தில் தங்கிச் சிறப்புரை ஆற்றியிருக்கிறார் என்ற செய்தியும் பௌத்தமும் சமணமும் தமிழகத்தின் கல்வி வரலாற்றுக்குச் செய்த பெரும் பங்கினை விளக்குகிறது.

37. (i) ஆனந்தரங்கர் தம் நாட்குறிப்பில், ஒரு நிகழ்வு எந்த ஆண்டு, எந்தத் திங்கள், எந்தக் கிழமை, எந்நேரம், எவ்விடத்தில் நிகழ்ந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

(ii) பிரெஞ்சுக் கப்பல் தளபதி லெபூர்தொனே ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டில் இருந்த சென்னையை, 1746இல் கைப்பற்றியதையும், அதனால் சினமுற்ற ஆற்காடு நவாபு அன்வர்தீன்கானின் மூத்த மகன் மகபூஸ்கான் பிரெஞ்சு அரசை எதிர்த்துப் போரிட்டதையும் நேரில் கண்டு உரைப்பதுபோல் நாட்குறிப்பில் கூறியுள்ளார்.

(iii) தேவனாம்பட்டணத்தைக் கைப்பற்றுவதற்காக ஆங்கிலேயருடன் பிரெஞ்சு அரசு நடத்திய படையெடுப்பு, புகழ்பெற்ற ஆம்பூர் போர் பற்றிய செய்திகள்.

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



(iv) தஞ்சைக் கோட்டை மீது நடத்திய முற்றுகை, இராபர்ட் கிளைவின் படையெடுப்பு, ஆங்கிலேயர் புதுச்சேரியை முற்றுகை இட்டது முதலியவற்றையெல்லாம் வரலாற்று ஆசிரியர் போன்று நாட்குறிப்பில் விளக்கிக் கூறியுள்ளார்.

38. (i) நமது நாட்டில் மரங்களில் மலரும் பூக்கள் பல உள்ளன. மனிதன் அவை அனைத்தையும் மனத்தினுள் ஏற்றுக் கொள்ளவில்லை.

(ii) நாகரிக வழக்கத்தில் காலத்திற்கேற்றபடி சீக்கிரமே வாடிடும் மலர்களுடன் மக்களுக்கு நிறைய தொடர்பு உண்டு.

(iii) பெரும்பாலும் இவற்றைப் பராமரிக்கும் பொறுப்பு தோட்டக்காரனுடைய கைகளில் இருக்கும். மலர்ச் செப்பினுள் வழக்கம்போல் போவதும் வருவதும்தான் அவற்றின் வேலை இதைத்தான் தாமஸிகம் அதாவது 'மெடீரியலிஸம்' என்கிறோம்.

**பிரிவு - 3**

39. **சொற்பொருள் பின்வரு நிலையணி :**

**அணி விளக்கம் :** ஒரு செய்யுளில் முன்னர் வந்த சொல்லும் பொருளும் பின்னரும் பலமுறை வந்து அதே பொருளைத் தருவது சொற்பொருள் பின்வரு நிலையணியாகும்.

**சான்று :** வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்.

**சான்று விளக்கம் :** செயலின் வலிமையையும் தன் வலிமையையும் பகைவனின் வலிமையையும் துணை வலிமையையும் சீர்தூக்கிச் செயல்பட வேண்டும்.

**அணிப்பொருத்தம் :** இக்குறட்பாவில் 'வலி' என்னும் சொல் மீண்டும் மீண்டும் 'வலிமை' என்ற ஒரே பொருளைக் குறிப்பதால் இது சொற்பொருள் பின்வரு நிலையணியாகும்.

**அல்லது**

**அணிச்சுட்டல் :** இக்குறட்பாவில் பயின்றுவரும் அணி பிறிதுமொழிதல் அணியாகும்.

**அணி இலக்கணம் :** புலவர் தாம் கூறக் கருதிய பொருளை வெளிப்படையாகக் கூறாமல் உவமையை மட்டும் கூறிப் பொருளைப் பெற வைப்பது பிறிதுமொழிதல்.

**இப்பாடலின் பொருள் :** களைய வேண்டிய முள்மரம், முற்றிக் காழ்ப்பேறிவிட்டால், அதுகளைபவர் கையை வருத்தும். ஆகையால் அது இளஞ்செடியாக இருக்கும் பொழுதே கிள்ளி எறிக. பகையை ஆரம்பத்திலேயே ஒடுக்க வேண்டும்.

**அணி விளக்கம் :** இக்குறட்பாவில் வள்ளுவர் களைய வேண்டிய முள்மரம், முற்றிக் காழ்ப்பேறிவிட்டால், அது களைபவர் கையை வருத்தும் என உவமையை மட்டும் கூறி அதன்மூலம் பகையை ஆரம்பத்திலேயே ஒடுக்க வேண்டும் எனத் தாம் சொல்லக் கருதியதைக் குறிப்பாகப் பெற வைப்பதால் இக்குறட்பா பிறிது மொழிதல் அணிக்கு ஓர் எடுத்துக்காட்டு ஆகும்.

**அணிப்பொருத்தம் :** இக்குறட்பாவில் முள் மரம் சிறியதாக இருக்கும்போதே வெட்டி அழித்துவிட வேண்டும் என்ற உவமையைக் கூறி, பகைவர் வலிமையற்று இருக்கும்போதே வெற்றி கொள்ள வேண்டும் என்ற பொருளைப் பெற வைப்பதால் இது பிறிதுமொழிதல் அணியாகும்.

40. **பொருண்மொழிக் காஞ்சித் துறை :**

**துறை விளக்கம் :** மக்களுக்கு நலம் செய்யும் வாழ்வியல் நெறிகளை எடுத்துக்கூறுதல் பொருண்மொழிக் காஞ்சித் துறை ஆகும்.

**சான்று :** புகழெனின் உயிரும் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்

**சான்று விளக்கம் :** தமக்காக உழைக்காமல் பிறருக்காக உழைப்பவர்கள் அமிழ்தம் கிடைத்தாலும் தனித்து உண்ண மாட்டார்கள். யாரையும் வெறுக்காமல் சோம்பல் இன்றி செயல்படுவார்கள். பிறர் அஞ்சுவதற்கு தாமும் அஞ்சி புகழ் வருமெனில் தம் உயிரையும் கொடுப்பார்கள். உலகம் முழுவதும் கிடைப்பதாக இருந்தாலும் பழி வரும் செயல்களைச் செய்யாமல் தவிர்ப்பர். எதற்கும் மனம் தளர மாட்டார்கள்.

**துறைப் பொருத்தம் :** மக்களுக்குத் தேவையான வாழ்வியல் நெறிகளைக் கூறியுள்ளதால் இது பொருண்மொழிக் காஞ்சித் துறைக்குப் பொருந்தியுள்ளது.

**அல்லது**

**பாடாண் திணை:**

**திணை விளக்கம் :** பாடாண் திணையானது ஒரு மன்னனின் புகழ், வலிமை, வள்ளன்மை, அருள் முதலானவற்றை ஆய்ந்து கூறுவதாகும். பாடு + ஆண் + திணை. அதாவது பாடப்படும் ஆண்மகனின் உயர்பண்புகளைக் கூறுவது இத்திணையின் நோக்கமாகும்.

**சான்று :**

மண்ணுடை ஞாலத்து மன்னுயிர்க் கெஞ்சாது
ஈத்துக்கை தண்டாக் கைகடும் துப்பின்

**சான்று விளக்கம் :** இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தன் நாட்டையும் மக்களையும் கண்ணெனக் காத்தான். தன் நாட்டில் வாழும் குடிமக்களால் போற்றப்படுகிறான். இப்பெரிய நிலவுலகத்தில் வாழும் அனைத்து உயிர்களுக்கும் இடையறாது கொடுக்கும் பண்புடையவன்.

**திணைப்பொருத்தம் :** இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் குடிமக்களால் போற்றப்படும் பண்பையும், நிலவுலகில் வாழும் அனைத்து உயிர்களுக்கும் பொருள்கள் கொடுக்கும் கொடைத்தன்மையும் இரக்க உணர்வும் உடையவன் என்று சேரலாதனைப் பற்றி புகழ்ந்து அவனது ஒழுகலாறுகளைப் பாடுவது பாடாண் திணையாகும்.

41. 1. உளவாளி
2. நூலகம்
3. வருமானம்
4. பட்டதாரி

**(அல்லது)**

42. தமிழ் இலக்கணம் ஐந்து வகைப்படும். அவை எழுத்து, சொல், பொருள் யாப்பு, அணி என்பவையாகும். அதில் பொருள் இலக்கணம் இரு வகைப்படும். அவை, அகப்பொருள், புறப்பொருள். அகப் பொருள் மூன்று வகைப்படும். அவை, முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள். நிலமும் பொழுதும் முதற்பொருளாகும்.அவற்றுள் நிலம் ஐந்து வகைப்படும். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை. பொழுதுகள் சிறுபொழுது, பெரும்பொழுது என இரு வகைப்படும்.

43. **திரண்ட கருத்து :** குளத்தின் கரையிலமைந்த பசுமையான தோட்டங்களில் மயில்கள் ஆடுகின்றன, தாமரை மலர்கள் விளக்குகளைப் போல உயர்ந்து நிற்கின்றன. இடியோசை மயிலின் நடனத்துக்கு மத்தளம் வாசிக்கிறது. நீலக் குவளை மலர்கள் அந்த நடனக் காட்சியைக் கண்விரித்துப் பார்த்துக் கொண்டிருக்கின்றன. குளத்தின் குளிர்ந்த நீரலைகள் நடன அரங்கத்தின் திரைகளாக அமைகின்றன. இனிமையைப் பொழியும் மகர யாழைப்போல வண்டுகள் பாடிக் கொண்டிருக்கின்றன. இத்தகைய அரங்கத்தில் மருத நாயகி வீறு தோன்ற அமர்ந்திருப்பது போன்றிருந்தது மருத நிலம்.

**மையக்கருத்து :** மருதநிலத்தின் இயற்கை அழகை மிக அழகாக எடுத்தியம்புகிறது இப்பாடல்.

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**தொடை நயம் :** தொடுக்கப்படுவது தொடையாகும். அவை எதுகை, மோனை, இயைபு, முரண்

**மோனை :** தண்டலை - தாமரை ; தாங்கக் - கொண்டல் ; குவளை - சீர்மோனைகள்

எதுகை : தண்டலை - கொண்டல்கள் ; தெண்திரை - வண்டுகள் - அடி எதுகை.

**அணிநயம் :** இயல்பு நவிற்சி அணி,

## பகுதி - IV

44.

அ) **முன்னுரை:** திருக்குறளில் அறத்துப்பாலில் நூற்று இருபத்து இரண்டாவது அதிகாரம் 'அடக்கமுடைமை' ஆகும். அடக்கமுடைமை என்பது மனம் மொழி மெய்களால் அடக்கி ஒழுகுதலைச் சொல்வது. இவை ஐம்புலனடக்கம், நாவடக்கம், சினம் காத்தல் போன்ற தன்மைகளைக் கூறுவது. அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும் என்பதைப் பற்றிக் காண்போம்.

**அடங்கியவனின் தோற்றம்:** தன் நிலையிலிருந்து அதாவது நேர்வழி மாறாது அடக்கமாக இருப்பவனின் தோற்றமானது ஓங்கி உயர்ந்து நிற்கும் மலைக் காட்டிலும் மிகப் பெரிதான உயர்வு உள்ளதாகும்.

நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

**நாவை காக்க:** ஒருவர் எவற்றைக் காக்காதவர் ஆனாலும், குறைந்தபட்சம் தம் நாவையாவது தவறாமல் காக்க வேண்டும். அவ்வாறு காக்கத் தவறினால் அவர் கூறும் சொல்லிலே குற்றம் ஏற்பட்டது துன்பம் அடைவர்.

யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்கப் பட்டு.

**முடிவுரை:** ஆகவே அடக்கமே ஒருவரை உயர்த்தி தேவர்கள் வாழும் உலகத்தில் வைக்கும். அப்படிப்பட்ட அடக்கத்தை உறுதிப் பொருளாகக் கொண்டு போற்றிக் காக்க வேண்டும். அந்த அடக்கத்தைவிட மேம்பட்ட செல்வம் உயிர்க்கு இல்லை.

**(அல்லது)**

ஆ) **முன்னுரை :** அரசு என்பது மக்களுக்கானதே என்று காலந்தோறும் இலக்கியங்கள் மூலம் கவிஞர்கள் வலியுறுத்தி வருகின்றனர். 'புரட்சிக்கவி' என்ற இந்தக் காவியத்தின் மூலமாக பாரதிதாசன் மக்களாட்சி சிந்தனைகளை முன் வைக்கிறார். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியன மக்களாட்சியின் அடிப்படைக் கூறுகளாகும். பாரதிதாசன் ஒரு 'புரட்சிக்கவி' என்பதை உதாரன் கதைப் பாத்திரம் வாயிலாகக் காண்போம்.

**நிறை உழைப்பு :**

(i) தண்டனை நிறைவேற்றும் முன் அமைச்சர் உதாரன், அமுதவல்லி இருவருக்கும் கடைசியாகப் பேச வாய்ப்பளிக்கிறார். உதாரன் மக்களை நோக்கி ஆவேசமாக உரை நிகழ்த்துகிறான்.

(ii) 'ஓடி வருகின்ற ஆற்றுநீரைத் தடுத்து குளம், குட்டை, ஏரிகளை அமைத்தவர் நீங்கள். அவற்றிலிருந்து நீர் கொண்டு செல்ல வாய்க்கால் வெட்டியவர் நீங்கள். தரிசு நிலத்தை வரப்பெடுத்து உழுது பயிர்களை விளைவித்தவர் நீங்கள். உழவுத் தொழில் செய்யும் மக்கள் கூடி வாழும் சிற்றூர்களை உருவாக்கினீர்கள்.

(iii) கல்லையும் மலையையும் பிளந்து உலோகத்தால் கருவிகளை உருவாக்கியவர் நீங்கள். தங்கத்தை வெட்டியெடுத்தது உங்களின் கைகள் கடலுக்குள் மூழ்கி மூச்சையடக்கி முத்தெடுத்தவர் நீங்கள். இவையெல்லாம் உங்கள் தோளின் உழைப்பால் வந்ததே அல்லாமல் அரசனின் செயலால் அல்ல.

**குடியரசு :** அரசனுக்கும் எனக்கும் வழக்கு உண்டாகி உள்ளது. இதற்கு தீர்வு காண வேண்டியவர் அரசனாக எப்படி இருக்க முடியும்? தீர்ப்புக் கூற வேண்டிய இடத்தில் மக்களை வைப்பதுதானே சரியாக இருக்கும். அரசனின் தேவைக்குத்தான் நாடு என்றால், அந்நாடு அழிவதே நல்லது என்பேன். இன்று எனக்கு ஏற்பட்ட நிலை நாளை உங்கள் ஒவ்வொருவருக்கும் ஏற்படுமல்லவா? எண்ணிப்பாருங்கள்.

**எனக்கு உயிர் தமிழ் :** அரசன் என்னை அழைத்துத் தன் மகளுக்குக் கவிபாடக் கற்றுக்கொடுக்கப் பணித்ததற்கும் அவள் என்மேல் காதல் கொண்டதற்கும் தமிழ்தானே காரணம்? அத்தமிழ்மொழிக்கு இழுக்கு உண்டாவதை நீங்கள் பார்த்துக்கொண்டிருக்கலாமா? தமிழை உயிரெனப் பாதுகாக்க வேண்டாமா?

**புரட்சிக்கவி :** அரசனுக்குப் பின் நாட்டை ஆளும் தகுதி படைத்த அமுதவல்லி மக்களுக்கு ஆளும் உரிமையைக் கொடுக்க நினைத்தாள். அவளுக்கும் தண்டனை வழங்கிச் சட்டத்தை அவமதித்தான் அரசன், சிந்திப்பீர் மக்களே! விடைபெறுகிறேன் நான் இன்று' என்று தாய்நாட்டையும் மக்களையும் வணங்கினான் உதாரன். அன்புக்கு அழிவில்லை, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், குடியாட்சி உரிமைகள் ஆகியவை பற்றி உதாரன் வாயிலாக உரக்க சொன்னதால் பாரதிதாசன் 'புரட்சிக்கவி' என்பதை மெய்ப்பித்திருக்கிறார்.

**முடிவுரை :** இசையுணர்வும் நல்லெண்ணமும் அவருடைய உள்ளத்தில் கவிதையுருவில் காட்சி அளிக்கத் தலைப்பட்டன. சிறு வயதிலேயே சிறு சிறு பாடல்களை, அழகாகச் சுவையுடன் எழுதித் தமது தோழர்களுக்குப் பாடிக் காட்டுவார். கல்வி, பொதுவுடைமை, பெண்ணியம் எனப் பலத்தளங்களில் புரட்சி மிக்க கவிதை வரிகளை எழுதியவர். இதனால் அறிஞர் அண்ணாவால், புரட்சிக்கவி என்று பாராட்டப்பட்டு பரிசளிக்கப் பெற்றார்.

45.

அ) **முன்னுரை:** வேளாண்மையை முறையாக, யாருக்கும் தீங்குத் தராத வகையில் மேற்கொள்வது இயற்கை வேளாண்மையே. அந்த இயற்கை வேளாண்மை முறைகள் சுற்றுச் சூழலையும் வளப்படுத்துகிறது என்பதே உண்மை. அதைப் பற்றிய மேடைப் பேச்சிற்கான உரையை இங்குக் காண்போம்.

**உரை:** பெரியோர்களே! சான்றோர்களே! என் அருமை தோழர்களே! தோழிகளே! உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். மனித உயிர்கள் வாழ அடிப்படையாக விளங்குவது வேளாண்மை. அதனால்தான் 'உழவு உலகிற்கு அச்சாணி' என்று வள்ளுவரும் போற்றுகிறார். 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்று முண்டாசுகவி பாரதியாரும் போற்றுகின்றார்.

இயற்கையிலிருந்து விலகுகிறது இம்மண்ணுலகம். இதனால் இம்மண்ணில் வாழும் உயிர்களுக்கும் ஊறு விளைவிக்கின்ற இந்நிலை மாறவும் இயற்கை வேளாண்மை புதுப்பொலிவு பெறவும் வலியுறுத்துகிறது என்னுடைய கன்னிப்பேச்சு! அண்மையில் நம்மை விட்டு மறைந்தாலும்; நம் கண்ணைவிட்டு மறைந்தாலும் என்றும் தமிழர் நெஞ்சில் நிலைத்து வாழும் இயற்கை வேளாண்மை மீண்டும் இம்மண்ணில் விதையூன்றிய நம்மாழ்வார் ஐயாவின் வழியைப் பின்பற்றி இயற்கை முறையில் வேளாண்மை செய்ய முயன்றால் நம்நாடு நோயில்லா நாடாக மாறும். இயற்கை வளமை கொழிக்கும்.

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



இன்றைக்கு செயற்கை உரங்கள், பூச்சிக்கொல்லி என்று மண்ணை நஞ்சாக்கி அதில் விளையும் பயிர்கள் எல்லாம் பாழ்படுத்தப்படுகின்றன. பூச்சிக்கொல்லி பயிரில் இருக்கும் பூச்சியை மட்டும் கொல்லவில்லை. அதனைச் சாப்பிடுகின்ற மக்களுக்கு அதிகமாக நோய் வருகிறது.

வேதிக்கலப்பே இல்லாமல் நம் முன்னோர்கள் பயன்படுத்திய வேப்பங்கொட்டை, நொச்சி இலை, புங்கன், பிரண்டை, கற்றாழை எல்லாவற்றையும் நன்றாக இடித்து கோமியத்தில் ஊறவைத்து அதைத் தெளித்தால் பூச்சிகள் பயிர்களைத் தாக்காது. காய்ந்த இலைச் சருகு, சாம்பல் ஆகியவற்றைக் கலந்து போட்டால் போதும். இது புன்செய் நிலத்திற்கு உகந்ததாகும். ஆடு, மாடு முதலிய கால்நடைச் சாணத்தை எரிப்பதனால் கிடைக்கும் சாம்பல் மட்டும்தான் பயன்படுத்த வேண்டும். உளுந்து நெல்லுக்கு ஊடு பயிராகப் போடுவது! இதை அறுவடை செய்த பின், அதன் வேர் முடிச்சுகளில் இருக்கும் நைட்ரஜன் நிலத்தின் வளத்தைப் பெருக்கி அடுத்த விளைச்சலை அதிகரிக்கச் செய்யும். இயற்கை உர பூச்சிக்கொல்லியைப் பயன்படுத்தினால் நுண்ணுயிர்ப் பெருக்கம் குறையாமல், மண் சத்து வீணாகாமல் மண்வளமும் அதிகமாகும்.

உழப்படாத நிலம், இரசாயன உரம் இல்லாத உற்பத்தி, பூச்சிக்கொல்லி தெளிக்கப்படாத பயிர்ப் பாதுகாப்பு, தண்ணீர் நிறுத்தாத நெல்சாகுபடி, ஒட்டுவிதை இல்லாமல் உயர் விளைச்சல் என்னும் ஐந்து விவசாய மந்திரங்களை உலகிற்குச் சொன்னவர் **'ஒற்றை வைக்கோல் புரட்சி'** எனும் நூலை எழுதிய **மசானபு ஃபுகோகா.**

**முடிவுரை:** பலமுறை உழவு செய்வதைக் காட்டிலும் எருவிட்டு வளப்படுத்துதல் சிறந்தது. இவ்விரண்டும் செய்து களையும் எடுத்தபின், பயிரைக் காத்தல், நீர் பாய்ச்சுவதிலும் நல்லதாகும் என்ற வள்ளுவரின் கூற்றுப் போல் இயற்கை வழி விவசாயம் செய்து மண்ணையும், மக்களையும் சுற்றுச் சூழலையும் காப்போம். நன்றி!

**(அல்லது)**

ஆ) **முன்னுரை :** மனித மனத்தில் அழகுணர்ச்சியை ஏற்படுத்துபவை கலைகள். அவை மனிதனின் படைப்புத் திறனால் உருவானது. கலைகள், சிற்பம், கட்டடம், ஆடல், பாடல் எனக் கலைகள் பல வகைப்படும். அவற்றுள் நமக்கு வியப்பை ஏற்படுத்துவது தஞ்சைப் பெரியக் கோவிலின் கட்டடக் கலையே.

**கல்லும் கதை சொல்லும் :**

(i) பதினோறாம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த முதலாம் இராசராச சோழன் தஞ்சைப் பெரிய கோவிலை 1003ஆம் ஆண்டு தொடங்கி 1010 ஆம் ஆண்டு வரைக் கட்டினான். 2010இல் இக்கோவிலின் 1000ம் ஆவது ஆண்டு நிறைவடைந்தது.

(ii) பெரிய கோவிலின் கோபுரங்களில் உயரமானது கேரளாந்தகன் கோபுரம். இராசராசன் 988ஆம் ஆண்டு சேர நாட்டை வெற்றி கொண்டதைப் போற்றும் வகையில் இக்கோபுரத்திற்கு "கேரளாந்தகன் வாயில் கோபுரம்" எனப் பெயரிடப்பட்டுள்ளது.

(iii) பெரிய கோவில் நம் நாட்டிலுள்ள கற்றளிக் கோவில்களிலேயே பெரியதும் உயரமானதும் ஆகும். இக்கோவில் விமானம் 216 அடி உயரம் உடையது. கருவறை விமானம் 13 தளங்களை உடையது.

(iv) இந்தியக் கட்டடக் கலைப் பாணியை நாகரம், வேசரம், திராவிடம் என்று மூன்றாகக் கூறுவர். அதில் தஞ்சைக் கோவில் எண்பட்டை வடிவில் கட்டப்பட்ட திராவிடக் கலைப்பாணியாகும்.

(v) தஞ்சைக் கோவிலில் நந்தியும் சிகரமும் ஒற்றைக் கல்லால் ஆனது. இங்குள்ள நந்தி, சோழர் காலத்தைச் சார்ந்தது அன்று. இங்கு உள்ள பெரிய நந்தியும் மண்டபமும் நாயக்கர் காலத்தது, சோழர் காலத்து நந்தி தற்போது தென்புறத் திருச்சுற்றில் உள்ளது.

(vi) இராசராசன் காலத்தில் பெண் அதிகாரிகள் அரசுப் பணிகளில் இருந்திருக்கிறார்கள். 'எருதந் குஞ்சிர மல்லி' என்ற பெண் அதிகாரியைப் பற்றி இக்கோவில் கல்வெட்டு குறிப்பிடுகிறது.

(vii) முதலாம் இராசாதிராசன் காலத்தில் பெண் அதிகாரியாக சோமயன் அமிர்தவல்லி என்பவரும் இருந்துள்ளார். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பெண்கள் அதிகாரிகளாகப் பணிபுரிந்திருக்கின்றனர். கோயிலை கட்டிய தச்சர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டிருந்தன.

**முடிவுரை :** பல நூறு ஆண்டுகள் கடந்தும் கம்பீரமாக நிற்கும் தஞ்சைப் பெரியக் கோவில் தமிழர்களின் மிகச் சிறந்த கட்டடக் கலைக்குச் சான்றாக விளங்குகிறது. 'கல்லும் கதை சொல்லும்' என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோயிலுக்குப் பொருந்தும் என்பதனை மேற்கண்ட சான்றுகள் வாயிலாக நாம் அறிந்து கொண்டோம்.

46.

அ) **முன்னுரை :** அ. முத்துலிங்கம் இலங்கை தமிழர். யாழ்ப்பாணத்துக்கு அருகிலுள்ள கொக்குவில் எனும் கிராமத்தில் பிறந்தவர். 1996-இல் வம்சவிருத்தி சிறுகதைத் தொகுப்புக்கு தமிழக அரசின் பரிசினைப் பெற்றவர். 1996ல் வடக்கு வீதி என்ற சிறுகதைத் தொகுப்புக்கு சாகித்திய விருதையும் பெற்றவர். இவர் தற்போது கனடாவில் வாழ்ந்து வருகிறார். புலம் பெயர்ந்த மக்களின் அவலங்களை இப்பகுதிச் சுட்டுகிறது.

**சங்க இலக்கியம் கூறிய புலம்பெயர் நிகழ்வு:**

(i) தமிழர்கள் வேலைவாய்ப்பு, வறுமை போன்ற காரணங்களினால் இடம் விட்டு இடம் செல்கின்றனர். இவ்வாறு புலம்பெயர்வது ஒன்றும் புதிதல்ல. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக மனிதன் புலம் பெயர்ந்தபடியே இருக்கிறான்.

(ii) சங்க இலக்கியம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்து நிலங்கள் பற்றிப் பேசும் பல பாடல்கள் தலைவன், தலைவி பிரிந்து போவதைச் சொல்லும் பொருள் தேடப் போவதால் புலம்பெயர நேரிடுகிறது.

(iii) நற்றிணை 153ஆவது பாடலில் 'தனிமகனார்' சினம் கொண்ட அரசனின் கொடுமைத் தாங்க முடியாமல் துயருற்று, சொந்த ஊரைவிட்டு ஓடியவர்களின் கதையை,

'வெஞ்சின வேந்தன் பகை அலைக்கலங்கி,
வாழ்வோர் போகிய பேர் ஊர்ப் பாழ்'

என்கிறார்.

(iv) 2000 வருடங்களுக்கு முன்னர் அரசரின் கொலைச் சீற்றத்திற்குப் பயந்து வெளியேறியவர்கள் போலத்தான் சமீப காலங்களில் புகலிடம் தேடி அலைந்து கரை சேர்ந்தவர்களையும் சொல்லலாம்.

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**கனடாவில் புலம்பெயர் நிகழ்வுகள் :**

(i) தமிழ் அகதிகள் கனடாவுக்குக் குடிபெயரத் தொடங்கியது 1983 ஆம் ஆண்டுகளுக்குப்பின்னர்தான். அவர்கள் குடியேறிய சில வருடங்களிலேயே பத்திரிகைகளும் ஆரம்பித்துவிட்டார்கள். நிரந்தர வேலை கிடையாது. அடுத்த வேளை உணவு பற்றி நிச்சயமில்லை. ஆனால் பத்திரிகைகளும் இலக்கிய சஞ்சிகைகளும் தொடங்கியுள்ளனர்.

(ii) புது நாட்டில் புது வாழ்க்கையைப் பதிவு செய்கின்றனர். இன்றைய கணினி யுகத்தில் தமிழ் கற்பது இலகுவாகிவிட்டது. தமிழர்கள் எட்டுக்கோடிப் பேர் உலகம் முழுவதும் இருக்கிறார்கள்.

(iii) நியூசிலாந்திலிருந்து அலாஸ்காவரை பரந்துபோய்ப் புலம்பெயர் தமிழர்கள் பத்து லட்சம் பேர் வாழ்கிறார்கள்.

(iv) அதனால்தான் 'சூரியன் மறையாத தமிழ்ப் புலம்' என்று சொல்லும் அளவிற்குத் தமிழர்கள் புலம் பெயர்ந்துள்ளனர்.

**அ. முத்துலிங்கத்தின் திணைப் பாகுபாடு :**

(i) சங்க இலக்கியத்தின் எட்டுத் தொகையில் ஒன்று ஐங்குறுநூறு. ஐவகை நிலத்திற்கும் ஒவ்வொரு நூறு பாடலாக ஐந்நூறு பாடல்கள் கொண்டது.

(ii) அந்நூலில் பனியும் பனி சார்ந்த நிலத்துக்கும் பாடல்கள் இல்லை. புலம்பெயர்ந்த பத்து இலட்சம் மக்கள் சென்றடைந்தது பனிப் பிரதேசங்களுக்குத்தான்.

(iii) ஆறு மணிக் குருவிக்கு எல்லையே கிடையாது. இமயமலைக்குப் பறந்துபோய் மீண்டும் திரும்பும். அதேபோல்தான் ஈழத்திலிருந்து புலம் பெயர்ந்தவர்களும், அவர்களுக்கு எல்லையே கிடையாது. அவர்கள் உலகம் ஆறாம் திணையான பனியும் பனி சார்ந்த நிலமும்தான்.

(iv) இவ்வாறு தமிழர் வாழ்வோடும் புலம் பெயர் நிகழ்வுகளோடும் அ. முத்துலிங்கத்தின் திணைப் பாகுபாடு இணைக்கப்படுகிறது.

**முடிவுரை:** தாய்மண்ணிலிருந்து மனிதவுயிர்களைப் பெயர்த்து எறியும் போக்கு காலந்தோறும் நடந்துவரும் பேரவலமாகும். தங்களுடைய தாய்நாட்டிலிருந்து வெளியேறியவர்களும் வெளியேற்றப்பட்டவர்களும் எதிர்கொள்ளும் அவலங்களை ஆறாம்திணை ஆறாத வடுவாகப் பதிவு செய்கிறது.

**(அல்லது)**

ஆ) **முன்னுரை :** தன்னம்பிக்கை, உழைப்பு, விடாமுயற்சி கொண்டு நாட்டியக்கலையில் தமக்கெனத் தனியிடத்தைப் பெற்றவர் நர்த்தகி நடராஜ். தமிழக அரசின் கலைமாமணி விருது, இந்திய அரசின் சங்கீத நாடக அகாதெமி விருது போன்ற பல விருதுகளுக்குச் சொந்தக்காரர். அவரின் நேர்காணல்வழி அறிந்த செய்திகளைக் காண்போம்..

**இளமைப் பருவம் :** நர்த்தகி நடராஜ் மதுரையில் உள்ள அனுப்பானடியைச் சேர்ந்தவர். அவருடைய தோழியின் பெயர் சக்தி. அவருடைய முன்னேற்றத்திற்குச் சக்தியே துணை புரிந்துள்ளார். வைஜெயந்தி மாலாவின் குருவான தஞ்சை கிட்டப்பாவிடம் பரதம் கற்றார். கிட்டப்பா அவரைத் தம் மகளாகவே பார்த்துக் கொண்டார். அவரே **'நர்த்தகி'** என்று பெயர் சூட்டினார்.

**பெண்மையை உணர்தல் :** பரதம் கற்றபோது பெண்மையை உணர்ந்தார். பெண்மையை வெளிப்படுத்தும் நொடி நதியலையில் விழுந்த இலைபோல, காற்றில் பறக்கும் இறகு போல மனம் அதன் போக்கில் செல்லும். அந்த விநாடி உலகையே மறப்பேன் என்று கூறுகிறார். திரைப்படங்களில் வரும் நடனம் ஈர்த்ததாகக் கூறுகிறார்.

**விழிப்புணர்வு :** சங்க இலக்கியம் முதல் சிற்றிலக்கிய காலம் வரை ஆழ்ந்துப் படித்துள்ளார். திருநங்கையர் எல்லாக் காலக் கட்டத்திலும் இருந்துள்ளனர். தொல்காப்பியத்தில் அதற்கான சான்று உள்ளது. சிலப்பதிகாரத்தில் குறிப்பிட்டுள்ள 11 வகையான ஆடற்கலைகளில் 'வேளிர் ஆடல்' முக்கியமானது. சங்க இலக்கியம் முதல் தற்போதைய நவீன கவிதை வரையிலும் நடனத்தில் முயற்சி செய்கிறார். இதுவும் திருநங்கையர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்த ஒரு வகை விழிப்புணர்வுதான்.

**நுட்பமான முத்திரைகள் :** ஜப்பானிலுள்ள ஒசாகா நகரத்தில் திருவாசகம், தேவாரப் பண்ணிசைப் பாடல்களைப் பரதமாக நிகழ்த்தியுள்ளார். அங்கு ஜப்பானியர்கள் மட்டும்தான் இருந்தனர். திருவாசகம் தேவாரம் தெரியாத அவர்கள் பரதத்தின் நுட்பமான முத்திரைகளை உள்வாங்கியதால் கண் கலங்கினர்.

**இழந்த பண்பாட்டை மீட்டல் :** பண்பாட்டு வேர்களை நாம் புறக்கணிக்கக்கூடாது. ஐரோப்பியப் பண்பாட்டில் ஊறிய நார்வேயில் நிகழ்ச்சி நடத்தும்போது திருக்குறளை மையமாக வைத்தே மாணவிகளுக்குப் பயிற்சிக் கொடுத்துள்ளார். அங்குள்ளோர் அந்த வினாடியில் இருந்து திருக்குறளை ஆர்வமாகப் படித்துள்ளனர். கலையின் வழியாகப் பண்பாட்டு மாற்றங்கள் நிகழ்ந்தே தீரும் என்று கூறுகிறார்.

**வழக்கறிஞராவதுதான் இலட்சியம் :** இவர் தமிழ்வழிக் கல்வி பயின்றவர். வழக்கறிஞர் ஆவதை முழுமுதல் லட்சியமாகக் கொண்டிருந்தவர். இவர் இதழ்களில் எழுதுவதோடு இலக்கிய மேடைகளிலும் பேசுகிறார். தமிழ் இலக்கியத்தில் சங்கப் பாடல்கள், திவ்வியப் பிரபந்தம், திருப்புகழ் மற்றும் தேவாரத்தை நடனம் மூலம் பரப்பியுள்ளார். இவ்விலக்கியங்களைப் பற்றித் தொடர்ந்து ஆய்வு செய்கிறார்.

**சோதனைகளைச் சமாளித்தல் :** மற்ற மானுடரைவிட எல்லாச் சோதனைகளையும் இரண்டு மடங்கு அனுபவித்துள்ளார். அதற்கு அவர் கொடுத்த விலை வலிதான். அகிலனின் 'தாமரை நெஞ்சம்' கதைநாயகி துக்கம் வரும்போது தண்ணீர் குடிப்பாள். அதைப் போல் இவர் நடனம் ஆடித் தம் துயரைப் போக்கிக் கொள்வார்.

**நெகிழ வைக்கும் தருணம் :** நர்த்தகி நடராஜ் நடத்தும் வெள்ளியம்பலம் அறக்கட்டளை நடனக் கலைக்கூடம் வாயிலாக நூற்றுக்கணக்கான மாணவிகளை உருவாக்கியுள்ளார். இவர் அம்மாவால் புறக்கணிக்கப்பட்டவர். தன் மாணவிகள் 'அம்மா' என்று அழைக்கும்போது அவருடைய மனம் நெகிழ்ந்ததாகக் கூறியுள்ளார்.

**முடிவுரை:** நர்த்தகி தன்னுடைய நடனத் திறமையால் அமெரிக்கா, இலண்டன், கனடா உள்ளிட்ட உலக நாடுகள் முழுவதும் பயணித்துத் தம் பரதத்தால் பல்லாயிரம் மேடைகளை அழகாக்கி வருகிறார். திருநங்கை என்ற சொல்லை அறிமுகப்படுத்தியவர். திருநங்கைகளுள் முதன் முதலில் கடவுச்சீட்டு, தேசிய விருது, மதிப்புறு முனைவர் பட்டம் எனப் பல்வேறு சாதனைகளைச் செய்தவர்.

47. அ) உடைஅணிந்தேன் எனச் சொல்லுகிறாய் - வெறும்
உடலுக் கணிவது உடையல்ல
விடையைக் கண்டேன் என்றுரைத்தாய் - ஒரு
வினாவாய் நீயே நிற்கின்றாய். **– அப்துல் ரகுமான்**

ஆ) வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல். **– திருவள்ளுவர்**

☆ ☆ ☆